லட்சம் மதிப்பீட்டில் தயாரித்தது. இத்திட்டத்தை பராமரிக்க ஆண்டொன்றுக்கு ரூ. 2,40,000 செலவாகும் என்று கணக்கிடப் பட்டது. இதற்கு நிதி ஆதாரம் இல்லாத காரணத்தால் பின்னர் நிறைவேற்றலாம் என நகராட்சி கருத்து தெரிவித்தது. எனவே தற்போதுள்ளதைக் கொண்டு மாற்றுத் திட்டம் ஒன்றை ரூ. 2 லட்சம் மதிப்பீட்டில் குடிநீர் வடிகால் வாரியம் தயாரித்துள்ளது. இதற்கு பராமரிப்பு செலவு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 53,000 ஆகும்.

(முற்பகல் 9-40)

திரு. துரை கலியமூர்த்தி : அந்த மாற்றுத் திட்டம் என்பது போர்வெல் அமைத்து நீர் எற்றுகின்ற திட்டமா அல்லது வேறு ஏதாவது மாற்றுத் திட்டமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அந்த மாற்றுத் திட்டம் இப்போது பரிசீலனையில் இருக்கிறது.

ராதாபுரம் சாலை

* 522 வினா—திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

நெல்லை மாவட்டம், ராதாபுரம் தொகுதியிலுள்ள ஆத்தன் கரை பள்ளிவாசல்—ராதாபுரம் நெடுஞ்சாலையை தூசு படியாத சாலையாக மாற்றும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஆம்.

திரு. யா. சை. மு. யூசுப் : இந்தத் திட்டம் எப்போது மேற் கொள்ளப்படும் என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இந்த ராதாபுரம் பள்ளி வாசல் சாலையில் முதல் 10.2 கிலோ மீட்டர் சாலை அரசு சாலை யாகவும், 4 கிலோ மீட்டர் பஞ்சாயத்து யூனியன் சாலையாகவும் இருக்கிறது. இதை 4.3 லட்சம் ரூபாய் செலவில் 10.2 கிலோ மீட்டர் சாலையை அரசு எடுத்து இதற்கான பணியை துவங்க இருக்கிறது. மற்றொரு பகுதியான திருவெம்பாலாபுரம் பள்ளி வாசல் சாலை—இந்த 4 கிலோ மீட்டர் சாலையை அரசு மேற்கொள்ள இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.